தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1975 மார்ச் 17.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்ட பத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Forensic Science Laboratory, Coimbatore

* 341 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a Regional Forensic Science Laboratory has been opened in Coimbatore recently ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூரிலுள்ள குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் வேதியல் வட்டார ஆய்வுக்கூடம் 2–5–1974-லிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இது கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்குரிய ஆய்வுக்கூடப் பணிகளைக் கவனிக்கிறது. உடல் உள்ளுறுப்புகள், குடலில் தங்கிய உணவுப் பொருள், குருதி, சிறுநீர் முதலியவற்றைப் பரிசோதனை செய்யும் பணிகளை இது மேற்கொள்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் வேறு எந்த எந்தப் பகுதிகளில் இதுபோன்ற ஆய்வுக்கூடம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது ? இனிமேல் புதிதாகத் திறப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப் பொழுது சென்னையிலுள்ள தலைமை ஆய்வுக்கூடத்திலிருந்து நச்சுப் பொருள் ஆய்வு செய்கின்ற ஒரு பிரிவை மாத்திரம் எடுத்து, கோவையிலும் மதுரையிலும் இரண்டு பிரிவுகளாக அமைத்திருக்கிறோம். திருச்சியிலோ, தஞ்சை மெடிகல் காலேஜை ஒட்டியோ மூன்றாவது இடமாக பிரித்து அமைக்கலாம் என்று அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத் தில் வைத்தியக் கல்லூரி இருக்கிற காரணத்தால் தஞ்சையிலோ, திருச்சி யிலோ அமைக்கலாம் என்கிற உத்தேசத்தில் இருப்பதாக முதல் அமைச்ச ரவர்கள் சொன்னார்கள். தஞ்சையிலேயே ஆரம்பிக்கிற முடிவினை எடுப் பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுதான் நான் முன்பே சொன்னேன். தஞ்சையில் மருத்துவக் கல்லூரி இருப்பதன் காரணமாக அதனையொட்டி ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சென்னை நகரில் பாதுகாப்புப் பணி.

*342 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் கண்காணிப்புப் பணிக்காக கூடுதலாக காவல் துறைப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) சென்னை மாநகரில் கண்காணிப்புப் பணிக்காக கூடுதலாக காவல் துறைப் பணியாளர்களை நியமிப்பதுபற்றி அரசு அவ்வப்போது பரிசீலித்து, தேவைக்கேற்ப அனுமதி வழங்கி வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பெரிய பெரிய நகரங்களில் இன்னும் கூடுதலாக காவலர்களை நியமித்தால் கண்காணிப்புப் பணியை விறுவிறுப்பாக்கலாமே, அதை அரசாங்கம் கருத்திற்கொண்டு பெரிய நகரங்களிலாவது கூடுதல் காவலர்களை நியமிக்க அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக் கேள்வி, காவல் துறைப் பணியாளர்களைப் பற்றியது. காவல் நிலையங்களை கூடுதலாக்கினாலும் காவல் துறைப் பணியாளர்களையும்தான் கூடுதலாக்க வேண்டியிருக்கிறது. 1974–75-ம் ஆண்டில், சென்னையில் மாத்திரம் 168 இரண்டாம் நிலை காவலர்கள், 12 முதல் நிலை காவலர்கள், அதற்கேற்ப வேறுபல பணியாளர்களையும் கூடுதலாக நியமிக்க அனுமதி அரசு வழங்கியது. அதைப்போல, மற்ற மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப அரசு அவ்வப்போது கவனித்து அனுமதிகளை வழங்கிக்கொண்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையில் சுமார் 800 மக்கள் தொகைக்கு ஒரு போலீசார் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், நெரிசலுள்ள சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களுக்கு இதிலே வரம்பு ஏதாவது விதிக்கப்பட்டிருக்கிறதா ? இதிலே மாறுதல் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதிக நெரிசல் சென்னை நகரத்திலே இருக்கும் காரணத்தால், 6—3—1975 நிலவரப்படி, இரண்டாம் நிலை காவலர்கள் 4,097 பேர் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முதல் நிலை காவலர்கள் 569 பேர். தலைமைக் காவலர்கள் 733 பேர். சப்-இன்ஸ்பெக்டர்கள் 239 பேர். இதற்கேற்ப